உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...


# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5


வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 09.06.2026 • மலர் 04 • இதழ்: 160 • செவ்வாய்க்கிழமை • Edition : Nagercoil • 09.06.2026 • Vol : 04 • Issue : 160 • Page : 4 • Rs. 5/-

# இந்திய பெண் ராணுவ அதிகாரிக்கு ஐ.நா. விருது

## பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து



புதுடெல்லி, ஜூன் 9

ஐ.நா. அமைதிப் படையில் சுமார் 5,000 வீரர்கள் பணி யாற்றிவருகின்றனர். ஆண்டுதோறும் மே 29ம் தேதி ஐ.நா. அமைதிப்படை தின மாக கொண்டாடப் பட்டு வருகிறது.

இந்த ஆண்டு ஐ.நா. அமைதிப் படை தினத்தை முன் னிட்டு வீர மரணம் அடைந்த இந்திய வீரர்கள் ஹர்பஜன் சிங்,

சுஜித் குமார் பிர தான் ஆகியோருக்கு ''டாக் ஹம்மர்ஸ்க் ஜோல்ட் பதக்கம்'' அறிவிக்கப்பட்டது. ஐ.நா. அமைதிப் படையில் பணியாற் றும் இந்திய ராணுவ பெண் அதிகாரி மேஜர் அபிலாஷா பராக் லெபனானில் முகாமிட்டுஉள்ளார்.

அங்குபெண்களின் பாதுகாப்பு, முன் னேற்றத்துக்காக அவர் பல்வேறு நட வடிக்கைகளை மேற்கொண்டு வரு கிறார்.

அவரதுசேவையை கவுரவிக்கும் வகை யில், “மிலிட்டரி ஜென்டர் அட்வ கேட் ஆப் தி இயர்'' விருது அபிலாஷா பராக்குக்கு அறிவிக் கப்பட்டது.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் அமைந்துள்ள ஐ.நா. தலைமை அலுவல கத்தில்ஐ.நா.பொதுச் செயலாளர் அந்தோ ணியோ குத்தேரஸ் விருதுகளை வழங்கி னார்.

இதுகுறித்து பிரத மர் மோடி சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில், ''மேஜர் அபிலாஷாபராக்கை வாழ்த்துகிறேன்.

இந்த கவுரவம், அவரது முன்மாதிரியான சேவைக்கும், ஐக் கிய நாடுகளின் அமைதி காக்கும் முயற்சிகளுக்கு இந் தியாநீண்டகாலமாக ஆற்றிவரும் பங்க ளிப்பிற்கும்கிடைத்த அங்கீகாரமாகும். அவரது இந்தச் சாதனை, எண்ணற்ற இந்தியர்களுக்கும், குறிப்பாக நமது மகள்களுக்கும் உத் வேகமாக அமைந் துள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

## சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



சேலம் ஜூன் 9

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும்மக்கள்குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது. பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்க ளுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், அடிப்படை தேவைகளுக்கு முக்கிய த்து வம் அளித்திடவும், பெண்களின் முன் னேற்றத்திற்கு தேவையான நடவடிக் கைகளை மேற்கொள்ளவும் அரசு அலுவலகமும் ஒருங்கிணைந்து செயல் பட வேண்டுமெனவும் பொதுமக்கள் ஒருமுறை வழங்கிய மனுக்கள் மீண்டும் வராத வகையில் மனு மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தப் பட்டது. அந்த அடிப்படையில் நேற் றைய தினம் நடந்த பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டு மனை பட்டா, பட்டா மாறுதல், ஜாதி சான்று, வேலைவாய்ப்பு, வங்கி கடன்கள், கல்வி உதவித்தொகை, திருமண நிதி உதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித் தொகை, மாற்று திறனாளிகளுக்கான உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அடிப்படை வசதிகள் கோரி 380 மனுக்கள் வர பெறப்பட்டது. மாற்றுத்திறனாளிகள் எந்தவித சிரமமும் இல்லாமல் மனுக்களை வழங்கும் வகை யில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவ லக தரைத்தளத்தில் மாற்றுத்திறனாளிக ளுக்கு நடத்தப்பட்ட குறைதீர் முகாமில் 63 மனுக்கள் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர் களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து மாற்றுத்திறனாளி கள் நலத்துறை சார்பில் ரூ 1400/= மதிப் பில் ஒரு மாற்றுத்திறனாளிக்கு கண் பார்வை அற்றோருக்கான பிரெய்லி கை கடிகாரமும், ஒரு மாற்றுத்திறனாளிக்கு 1800 ரூபாய் மதிப்பில் ஊன்றுகோல், ஒரு மாற்று திறனாளிக்கு ரூ 70 ஆயிரம் மதிப்பில் மின்கலத்தால் இயங்கும் மூன்று சக்கர சைக்கிள் ஒன்று மற்றும் ரூ 26, 800/= மதிப்பில் செயற்கை கால் ஆகிய நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் வழங்கி னார்.

## சேலம் மாவட்டம் எடப்பாடி தாலுகா சித்தூரில் மதுபான கடையை வேறு இடத்திற்கு மாற்றக்கோரி போராட்டம்

சேலம், ஜூன் 9

சேலம் மாவட்டம் எடப்பாடி தாலுகா சித்தூர் கிராமத்தில் வசித்து வரும் சமூக ஆர்வலர் மற்றும் குழு ஒருங்கிணைப்பா ளர் செந்தில்குமார் என்பவர் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத் தில் நடைபெற்ற பொது மக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் டாஸ்மாக் மதுபான கடை சித்தூர் பூலாம் பட்டி முக்கிய பிர தான சாலையில் அலுவலகங்கள், பள் ளிக்கூடம், கோவில்கள் இருக்கும் இடத் திற்கு அருகாமையில் கடை எண்: 7250 அரசின் டாஸ்மாக் மதுபான கடை இயங்கி வருவதால் பள்ளிக்கூடம் செல் லும் மாணவ, மாணவிகள், பொதுமக் கள் மற்றும் பெண்கள் அந்தப் பாதையில் செல்ல மிகவும் அச்சப்படுகிறார்கள். குடிமகன்கள் குடித்துவிட்டு ஆடைகள் களைந்த நிலையில் அறுவருக்கத் தக்க பேச்சுக்களை பேசுவதால் பெண்கள் அந்த வழியாக செல்ல முடிவதில்லை.



மேற்கண்ட மதுபான கடையை வேறு இடத்திற்கு மாற்றி தருமாறு பள்ளி மாணவ, மாணவிகள், பெண்கள் மற்றும் பொது மக்களுக்கு பாதுகாப்பை ஏற்ப டுத்திக் கொடுக்குமாறு மனு அளித்தார்.

ப்ரைட்ஸ் ஆப் பிரெஸ்டிஜ் அவார்ட்ஸ் ரெகோக்நிஷன் பெடரேஷன் அமைப்பின் சார்பில்

## ஏசியன் அவார்ட் விருது வழங்கும் விழா



கோவை ஜூன்:09

ப்ரைட்ஸ் ஆப் பிரெஸ்டிஜ் அவார்ட்ஸ் ரெகோக்நிஷன் பெடரேஷன் அமைப்பின் சார்பில் ஏசியன் அவார்ட் விருது வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் ஆளுமைகளை கௌரவிக்கும் நோக்கில் இந்த விருது வழங்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக மேட்டுப்பாளையம் காவல் துணைக் கண்காணிப்பாளர் (டிஎஸ்பி) பாஸ்கர்,கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத் தலைவர் கதிர்வேல்,அரசுப் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் டாக்டர் கோவிந்தராஜ் ஏ.வி.பாலா மருத்துவமனையின் டாக்டர் அருண்குமார் டி. சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பட்டய கணக்காளர் ஆர்.சதீஷ், ரைட்ஸ் இன்டர்நேஷனல் குழுமத்தின்கூடுதல்தலைவர்டாக்டர்அரவிந்த்குமார் ஏ.எஸ்.ஸ்ரீசாய்புரொஃபெஷனல்அகாடமிநிறுவனர் கலைப்பிரியா குமரேசன் மற்றும் அகில இந்திய தனியார் பல்கலைக்கழக சங்கத்தின் டீன் டாக்டர் மகேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.நிகழ்ச்சியில் கல்வி,சமூக சேவை,தொழில்,மருத்துவம் மற்றும் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.விருது பெற்றவர்களை சிறப்பு விருந்தினர்கள் பாராட்டி வாழ்த்தினர். இந்நிகழ்ச்சி சமூக முன்னேற்றத்திற்கும், திறமையாளர்களை ஊக்குவிப்பதற்கும் முக்கிய பங்காற்றும் வகையில் சிறப்பாக நடைபெற்றது.இதில் சர்வதேச உரிமைக்குழு துணைத் தலைவர் பாலசுப்ரமணியம் கலந்துகொண்டு கலந்து கொண்ட அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்தார்.

தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

## நில வேம்பு சித்தர் பாபு ஜி சுவாமிகளை சந்தித்த ஜனதா கட்சி சிறுபான்மை பிரிவு இப்ராஹிம்



கோவை ஜூன்:09

கோவை மலுமிச்சம்பட்டி பகுதியில் நாகசக்தி அம்மன் பீடத்தில்,மத நல்லி ணக்கத்தின்அடையாளமாக,நிலவேம்பு சித்தர் பாபு ஜி சுவாமிகளை சந்தித்த பார திய ஜனதா கட்சி சிறுபான்மை பிரிவை சேர்ந்த வேலூர் இப்ராஹிம்,ஆளுமை திறன் இல்லாமல் தவெக தற்போது திணறி வருகின்றது விரைவில் இந்த ஆட்சிகலையும்என்றுதெரிவித்துள்ளார்.

கோவை மலுமிச்சம்பட்டி பகுதியில், விஸ்வகர்மாஜகத்குரு நிலவேம்பு சித்தர் ஸ்ரீலஸ்ரீ பாபுஜி சுவாமிகள்திருக்கோவில் அமைந்துள்ளது.இங்கு விஸ்வரகர்மா சமூக மக்கள் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் பாபுஜி சுவாமிகளை, பார திய ஜனதா கட்சியின் தேசிய செயலாள ரும்,சிறுபான்மை பிரிவு வேலூர் இப்ராகிம்,மலுமிச்சம்பட்டி நாகசக்தி அம்மன் தியான பீடத்தில் இருவரும் இணைந்து,அரசியல் ஆலோசனை நடத் தினர்.அப்பொழுது முன்னாள் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை,பார திய ஜனதா கட்சியை விட்டு விலகிய பிறகு,ஏற்பட்டுள்ள பாதிப்பு மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணியில் அதிமுக வில் ஏற்பட்ட குழப்பங்கள் இந்த சூழ்நி லைகள்,இனி எதிர்காலத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியின் பயணம், நடை பெற உள்ள உள்ளாட்சித் தேர்தல் பணி கள்,இடைத்தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெறு வதற்கு என்னென்ன வழிகள் உள் ளன,முன்னாள் மாநிலத் தலைவர் அண் ணாமலை தற்பொழுது ஏற்பட்டுள்ள புதிய இயக்கத்தின் காரணமாக ஏற்படும் பாதிப்புகளைசரி செய்வதற்கு இளைஞர் களை தேசிய சிந்தனை பக்கமும் கொண்டு செல்வது குறித்து ஆலோ சனை மேற்கொண்டனர் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய வேலூர் இப்ராஹிம் கூறியதாவது, மத நல்லிணக்கத்தின் அடையாளமாக தமிழகம் முழுவதும் இஸ்லாமி யர்களு டன் இணைந்து பாரதிய ஜனதா கட்சி பயணித்து வருகின்றது.

கோவை மலுமிச்சம்பட்டி பாபுஜி சுவாமிகளை சந்தித்து அரசியல் குறித்து பேசியதாகவும்,அதில் தவெக அரசு ஆட் சியமைத்த பின்பு,தான் கொடுத்த வாக்கு றுதிகளை செயல்படுத்த முடியாமல் திணறி வருகிறது,உதாரணமாக விவசா யிகளுக்கு உரிய இழப்பீடு வழங்கபடும் என்று கூறிய முதல்வர் இன்று விவசாயி களுக்கு வெறும் 5000 ரூபாய் மட்டும் இழப்பீடு என்று தெரிவித்துள்ளார்.இது பொதுமக்கள் மத்தியிலும்,விவசாயிகள் மத்தியிலும் பெறும் கொந்தளிப்பை ஏற் படுத்தியுள்ளது இது, ஒரு ஆளுமையற்ற அரசியலுக்கு உதாரணமாக பார்ப்பதாக தெரிவத்தார். விரைவில் இந்த ஆட்சி கலையவும் வாய்ப்பு உள்ளது என்றார்.



தருமபுரிமாவட்டம்,நல்லம்பள்ளிவட்டம்,பாளையம்புதூர்ஊராட்சி,சமத்துவபுரத்தில் உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி சிறப்பு கிராம சபை கூட்டம் மாவட்ட ஆட்சியர் வே.சரவணன், அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) விமல் ரவிக்குமார், நல்லம்பள்ளி வட்டாட்சியர் பிரசன்ன மூர்த்தி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்வெ .லோகநாதன், வட்டார வளர்ச்சி அலுவலர் லோகநாதன் உள்ளிட்ட தொடர்புடைய அரசு துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள்க லந்துகொண்டனர்.

## 10, 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில்

# முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவியர்களுக்கு தவெக சார்பில் கல்வி ஊக்கத்தொகை, பாராட்டு கேடயம்



பெரியகுளம் ஜூன்.09

தமிழக வெற்றி கழகத்தின் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் தமிழ்நாட்டில் 10, 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப் பெண்கள் பெற்ற பள்ளி மாணவ/மாண விகளுக்கு ஆண்டுதோறும் பரிசளிப்பு விழா நிகழ்ச்சி நடத்தி அந்த மாணவ மாணவிகளை கௌரவப்படுத்தி ஊக் கத்தொகை வழங்கி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோன்று மாணவ/மாணவியர்களை கௌரவ படுத்தும் வகையில் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் பிரகாஷ் வழிகாட் டுதலின் படி பெரியகுளம் அருகே வடுக பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் பயின்ற பத்தாம் வகுப்பு மற்றும் பன்னி ரண்டாம் வகுப்பு தேர்வில் அதிக மதிப் பெண்கள் பெற்று முதல் மூன்று இடங் களை பிடித்துள்ள மாணவ/ மாணவிகளுக்கு தமிழக வெற்றி கழகத் தின் வடுகபட்டி பேரூர் மாணவரணி சார் பில் பரிசளிப்பு விழா நிகழ்ச்சி நடை பெற்றது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக பெரியகுளம் வடக்கு ஒன் றிய செயலாளர் சபரி கணேஷ் கலந்து கொண்டு மாணவிகளை பாராட்டி ஊக் கத்தொகை மற்றும் பரிசுகள் வழங்கி கௌரவித்தார். இதற்கான ஏற்பாடுகளை வடுகபட்டி மாணவரணி தலைமை வெங்கடேஷ்வரன் செய்திருந்தார். இவ் விழாவில் 10 &12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் இடம் பிடித்த மாணவி யர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையாக தலா ஒருவருக்கு ரூபாய் 10 ஆயிரம் காசோலையும், இரண்டாம் இடம் பிடித்த மாணவியர்களுக்கு கல்வி ஊக் கத்தொகையாக தலா ஒருவருக்கு ரூபாய் 5 ஆயிரம் காசோலையும், மூன்றாம் இடம் பிடித்த மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையாக தலா ஒருவருக்கு ரூபாய் 3 ஆயிரம் காசோலையும் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள், கேடயம் உள் ளிட்ட நினைவு பரிசுகள் வழங்கி கௌர விக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தவெக பேரூர் விஜயக்குமார், இளைஞரணி மகேஷ், தகவல் தொழில்நுட்ப அணி சந்தோஷ் ராஜா, பேரூர் உறுப்பினர் நிதிஷ்குமார் மற்றும் பெரியகுளம் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள், இளைஞர ணியினர், தகவல் தொழில்நுட்ப அணியி னர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# எக்ஸ்பீரியன், தனது புதிய 'இண்டஸ்ட்ரி இன்சைட்ஸ் மே 2026' அறிக்கை வெளியீடு

சென்னைஜூன் 09,

உலகின் முன்னணி தரவு மற்றும் தொழில்நுட்ப நிறுவனமான எக்ஸ்பீரி யன், தனது புதிய 'இண்டஸ்ட்ரி இன் சைட்ஸ் மே 2026' அறிக்கையை வெளி யிட்டுள்ளது. இந்த அறிக்கை, இந்தியாவின் சில்லறை கடன் சந்தை வலுவான வளர்ச்சியை கண்டுள்ளதைக் காட்டுகிறது.

பிணையத்துடனான கடன் வழங்க லில் வளர்ச்சி மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் சிறப்பான போக்குகள் ஆகிய அம்சங்களை இந்த அறிக்கை முன்னிலைப்படுத்துகிறது. இந்த வளர்ச் சியும், நேர்மறையான போக்குகளும் ஒருங்கிணைந்து, நம் நாட்டில் தற்போது நிலவும் நிலையான கடன் சூழலை வெளிப்படுத்துகின்றன.

மார்ச் 2026 நிலவரப்படி, நிர்வகிக்க ப்படும் மொத்த சொத்து மதிப்பு கடந்த ஆண்டை விட 19% அதிகரித்து, ரூ. 137 லட்சம் கோடியை எட்டியுள்ளது. அதே போல், புதிதாக வழங்கப்பட்ட கடன்க ளின் அளவும் கடந்த ஆண்டை விட 31% அதிகரித்து ரூ. 75 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இது, அதிக எண்ணிக்கை யிலான வாடிக்கையாளர்கள் கடன்க ளைப் பெறுவதை காட்டுகிறது.

கடன் வாங்கியவர்கள் பணத்தைத் திருப்பிச் செலுத்தும் போக்குகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதை இந்த அறிக்கை காட்டுகிறது. மார்ச் 2026ல், 30 நாட்களுக்கு மேல் கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களின் விகிதம் (Net 30+ Delinquencies) சுமார் 3.0% ஆகக் குறைந்து மேம்பட்டுள்ளது.

தனிநபர் கடன்கள், தங்கக் கடன்கள், நுகர்வோர் சாதனங்களுக்கான கடன்கள், வீட்டுக் கடன்கள், வாகனக் கடன்கள், கிரெடிட் கார்டுகள் மற்றும் இருசக்கர வாகனக் கடன்கள் என அனைத்துப் பிரி வுகளும் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றன. இது, இந்தியாவின் கடன் சந்தையில் அனைத்துப் பிரிவுகளிலும் பரவலான தேவை இருப்பதைக் காட்டு கிறது.

## களியல் அருகே கோ தையாற்றில்

# 4 மாதங்களுக்கு பின் மீண்டும் முதலை புகைப்படம் வெளியானதால் பரபரப்பு



மார்த்தாண்டம், ஜூன் 9

களியல் அருகே கோதையாற்றில் உள்ள உறை கிணற்றின் மேல் பகுதியில் கடந்த 5 மாதங்களுக்கு முன் முதலை ஒன்று கிடந்ததை பொது மக்கள் பார்த்த னர். கடையால் பகுதியை அடுத்த தோட் டாவாரம் பகுதிக்கும் செங்குழி என்னும் பகுதிக்கும் இடையே பாயும் கோதை யாற்றில் பயனற்ற நிலையில் காணப்ப டும் குடிநீர் உறிஞ்சு கிணற்றின் மேல் பகுதியில் கிடக்கும் முதலையை முத லில் அப்பகுதியை சார்ந்த பால்வெட்டு தொழிலாளி பார்த்துள்ளார்.

இதை தொடர்ந்து அப்பகுதியை சார்ந்த பலரும் பார்த்து வீடியோ வெளியிட்ட னர். மக்கள் அதிகமாக பயன்படுத்தும் ஆற்றில் முதலை கிடப்பது உறுதி ஆனது. இதைத் தொடர்ந்து மக்களி டையே பரபரப்பு ஏற்பட்டது.

உடனடியாக சம்பவ இடத்திற்கு மக் கள் பிரதிநிதிகள் வந்து பார்வையிட்டு களியல் வனத்துறை அதிகாரிகளை வரவ ழைத்து நடவடிக்கை எடுக்க வலியுறுத் தியதின் பேரில், மாவட்ட வனத்துறை அதிகாரி நேரில் ஆய்வு செய்து முத லையை பிடிக்க பல்வேறு நடவடிக் கைகள் எடுத்தனர். தொடர்ந்து பிப்ரவரி மாதம் முதலையை பிடிக்க கூண்டு அமைத்து அதே பகுதி யில் வனத்துறையினரும் கொட்கையும் அமைத்து கண்காணிப்பு பணியில் ஈடு பட்டு அப்பகுதியில் பொதுமக்கள் செல்ல தடையும் விதித்தனர்.

தொடர்ந்து பல நாட்கள் கழிந்தும் கூண்டில் முதலை சிக்காததாலும் , வனத் துறையினரின் கண்ணில் சிக்காதாலும் கண்காணிப்பு பணியை நிறுத்தி விட்டு கூண்டையும் அப்படியே விட்டு சென்ற னர். இந்த நிலையில் நான்கு மாதங்க ளுக்கு பிறகு அதே பகுதியில் கூண்டின் அருகாமையில் உள்ள கிணற்றின் மீது மீண்டும் நேற்று முதலை தென்பட் டுள்ளது.

இதை பார்த்த அப்பகுதி மக்கள் அதை போட்டாவாகவும் எடுத்து பதிவிட்டுள் ளனர். இந்த சம்பவம் இந்த பகுதி யில் மீண்டும் பரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

## களியக்காவிளை அருகே

# திருமணம் ஆகாத விரக்தியில் எல்ஐசி முகவர் தூக்கிட்டு தற்கொலை

களியக்காவிளை, ஜூன். 9

களியக்காவிளை அருகே மெதுகுமெல் தட்டான் விளை பகுதியை சேர்ந்தவர் சுந்தரேசன் அவரது மகன் அசோக்(31) . எல் ஐ சி அட்வைஸராக பணிபுரிந்து வரு கிறார். இவருக்கு இன்னும் திருமணமாகவில்லை. அசோக் குடிப்பழக்கத்துக்கு அடிமையாகியுள்ளார். திருமணம் நடைபெறாமல் இருந்ததால் மிகுந்த மன வேதனையில் இருந்த அவர் நேற்று முன்தினம் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் அறையில் மின் விசிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இதை அடுத்து களியக்காவிளை போலீசார் அவரது உடலை மீட்டு குழித்துறை அரசு மருத்துவமனையில் பிரேத பரி சோதனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து களியக் காவிளை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கேரளாவில்

# ஷிகெல்லா நோய் பாதித்து நான்கரை வயது சிறுமி உயிரிழப்பு



திருவனந்தபுரம், ஜூன்.9

கேரளா மாநிலம் கோழிக்கோடு அருகே உள்ள அண்டிக்கோடு பகு தியைச் சேர்ந்த நான்கரை வயது சிறுமி நிலா. கடந்த சில தினங்களுக்கு முன் இந்த சிறுமிக்கு வயிற் றுப்போக்கு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து நிலாவை கோழிக்கோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனு மதித்தனர். அங்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் அந்த சிறுமிக்கு ஷிகெல்லா நோய் பரவியிருந்தது கண் டுபிடிக்கப்பட்டது. தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் இந்த சிறுமி உயிரி ழந்தார்.

ஷிகெல்லா நோய் ஒரு வகையான பாக்டீரியா மூலம் பரவுகிறது. வாந்தி, வயிற்றுப்போக்கு ஆகியவை தான் இந்த நோய்க்கு முக்கிய அறிகுறிகள் ஆகும்.

இந்நிலையில் கேரள சுகாதாரத்துறை அமைச்சர் கே. முரளீதரன் கூறியது: கேரளாவில் ஷிகெல்லா நோய் பரவி வருகிறது. கோழிக்கோடு, வயநாடு, மலப்புரம் உள்பட மாவட்டங்களில் 126 பேருக்கு இந்த நோய் உறுதி செய்யப்பட்டுள்ளது. வயநாடு மாவட்டம் பத்தே ரியில் வாந்தி காரணமாக சில பள்ளி மாணவர்கள் மருத் துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்க ளுக்கு ஷிகெல்லா நோய் பரவியுள்ளதா என்பது இதுவரை உறுதி செய்யப்படவில்லை. அசுத்தமான தண்ணீர் மூலம் தான் இந்த நோய் பரவுகிறது. விடுதி கள், ஒட்டல்களில் சுத்தமான குடிநீர் கொடுக்க வேண் டும் என்றார்.

## தக்கலை அருகே

# பஸ் சக்கரத்தில் சிக்கி பள்ளி மாணவர் உயிரிழப்பு



தக்கலை, ஜூன்.9

நாகர்கோவில் அருகே பார்வ திபுரம் பகுதியை சேர்ந்தவர் சிவகுமார் மகன் ஷாய் (17). இவர் சுங்கான் கடையில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் பிளஸ் 2 படித்து வந்தார். இந்த நிலை யில் நேற்று முன்தினம் காலை யில் ஷாய், அவரது தந்தை மற் றும் தாயுடன் வில்லுக்குறியில் உள்ள ஒரு திருமண மண்டபத் தில் நடந்த உறவினர் ஒருவரின் திருமண நிகழ்ச்சிக்கு சென்று இருந்தனர். திருமணம் முடிந்த பிறகு மாலையில் பெண் வீட் டார் குலசேகரத்தில் உள்ள மாப் பிள்ளை வீட்டிற்கு சீதனப் பொருட்களோடு புறப்பட்டு செல்லும் நிகழ்ச்சி நடை பெற்றது. அப்போது மாணவன் ஷாய் ஒரு உறவினருடன் மோட்டார் சைக்கிளின் பின்னால அமர்ந்து குலசேகரம் நோக்கி புறப்பட்டார்.

குமாரகோவில் சந்திப்பு பகுதியில் செல்லும் போது முன்னாள் சென்று கொண்டிருந்த கார் ஒன்று திடீரென வேகத்தை குறைத்துள்ளதாக தெரிகிறது. இதனால் மோட் டார் சைக்கிள் நிலை தடுமாறி காரின் பின்பகுதியில் மோதி யது. இதில் மோட்டார் சைக்கிள் பின்னால் அமர்ந்திருந்த ஷாய் சாலையில் தூக்கி வீசப்பட்டார்.

அப்போது கண்ணிமைக்கும் நேரத்தில் எதிரே நாகர்கோ வில் நோக்கி வந்து கொண்டிருந்த அரசு பஸ் ஒன்று ஷாய் மீது ஏறி இறங்கியது. இதில் அவர் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற உறவினர் லேசான காயத்துடன் உயிர் பிழைத்தார். இதையடுத்து தக்கலை போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக தக்கலை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது குறித்து வழக்கு பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் வே.சரவணன் பெற்றுக்கொண்டார்கள்.

## பெரியகுளம் பகுதியில்

# சுகாதார சீர்கேட்டால் நோய் பாதிப்பிற்கு ஆளாகும் மக்கள்



தேனி, ஜூன் 9

தேனி மாவட்டம் பெரியகுளம் நகராட் சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள மக் கள் நகராட்சி நிர்வாகத்தின் மெத்தனம் மற்றும் அலட்சியப் போக்கால் சுகாதார சீர்கேட்டிற்க்கு ஆளாகி நோய் பாதிப் பிற்கு உள்ளாகும் சூழல் உள்ளது.பெரிய குளம் நகராட்சி நிர்வாகம் சார்பில் மது ரையை மையமாகக் கொண்டு செயல்பட்டு வரும் கிளீன்& கேர் நிறுவ னத்திற்கு பாதாள சாக்கடை ஒப்பந்த பணி வழங்கப்பட்டு பணி மேற்கொள் ளப்பட்டு வருகின்றது. பாதாள சாக் கடை இணைப்பு மற்றும் பாதாள சாக்க டையில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்யும் பணிகளை கிளீன் & கேர் தனி யார் ஒப்பந்த நிறுவனத்தினர் மேற் கொண்டு வருகின்றனர். பாதாள சாக் கடை இணைப்பு வேண்டி நகராட்சி நிர்வாகத்திடம் மனு அளித்து அவற் றிற்கு உரிய கட்டணத்தை செலுத்திய போதும் தனியார் நிறுவனத்திற்கு தனி யாக ஆயிரக்கணக்கில் பணம் கொடுக்க வேண்டிய சூழல் நிலவி வருகின்றது. நகராட்சி பணியாளர்களான குழாய் திருகி பணியில் ஈடுபட்டு வரும் நாகராஜ் ஆறுமுகம் மற்றும் டிரெய்னேஜ் கிளீராக பணிபுரியும் முருகன் மூலம் பணம் கொடுத்தால் மட்டுமே பணியாளர்கள் பணி மேற்கொள்கின்றார்கள், அவர்கள் எதிர்பார்த்த தொகையை கொடுக்க வில்லை என்றால் கிடப்பில் போட்டுவி டுவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள் ளது. இவை குறித்து நகராட்சி நிர்வாகத்திடம் முறையிட்டால் எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்வ தில்லை என புகார் எழுந்துள்ளது. நகராட்சி பொறியாளர் மோகன்ராஜ், பிட் டர் திருவாசகத்தை கையில் வைத்துக் கொண்டு அவர் கொடுக்கும் (லஞ்சம்) பைல்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து நகராட்சி பணியாளர்கள் ஆறுமுகம், நாக ராஜ், (குழாய் திருகி) முருகன் ( டிரெய் னேஜ் கிளீனர்) ஆகியோர்கள் மூலம் பணி மேற்கொண்டு வருகின்றனர். பாதாள சாக்கடை அடைப்பு நீக்கப் பணி யின் போது பணியாளர்களுக்கு எவ்வித பாதுகாப்பு உபகரணங்களும் வழங்கு வது கிடையாது. பெரிய குளம் நகராட் சிக்கு உட்பட்ட காயிதே மில்லத்நகர் பகு தியில் பாதாள சாக்கடையில் அடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் வெளியேறி கடந்த சில நாட்களாக அப்பகுதியில் சுகாதார சீர்கேடு நிலவி வருகின்றது. அவற்றை சரி செய்ய முறையிட்டால் STP மோட் டார் பழுதாகி உள்ளது என்றும், இவற்றை நகராட்சி பணியாளர்கள் மூலம் சரி செய்ய முடியாது, ஒப்பந்த பணியாளர் கள் தான் சரி செய்ய வேண்டும் அவர்கள் பணி மேற்கொள்ளும் வரை பொதுமக் கள் அமைதியாக இருங்கள் என பொறி யாளர் மோகன்ராஜ் தெரிவித்துள்ளா ராம். இதனால் இப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ள தோடு தொற்று நோய் ஏற்படும் அபாயம் உள்ளது. மாவட்ட நிர்வாகம் உடனடி தலையீடு செய்து குறிப்பிட்ட மூன்று நபருக்கு ஆத ரவாக லஞ்ச லாவண்ய போக்கிற்கு இட மளிக்கும் வகையில் செயல்பட்டு வரும் நகராட்சி பொறியாளர் மோகன்ராஜ் மீது நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் எனவும், மோகன்ராஜ் பொறுப்பேற்ற பின் பெரிய குளம் நகராட்சி பகுதியில் வழங்கப்பட்ட புதிய பாதாள சாக்கடை இணைப்புகள் மற்றும் அடைப்பு நீக்க பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை எழுந் துள்ளது.

## கிள்ளியூர் பேரூராட்சி

# 200 க்கும் மேற்பட்டோர் தவெகவில் இணைந்தனர்



மார்த்தாண்டம், ஜூன்.9

தமிழக வெற்றி கழகம் ஆட்சி பொறுப் பேற்று ஒரு மாதம் ஆன நிலையில் தமி ழகம் முழுவதும் மாற்று கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் திரளாக தமிழக வெற்றி கழகத்தில் இணைந்து வருகின்றனர். இத னால் தமிழகத்தில் தவெகவின் செல் வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது.

இன்னும் ஒருசில மாதங்களில் தமிழ கத்தில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற உள்ள நிலையில், குமரி மேற்கு மாவட் டம் கிள்ளியூர் பேரூராட்சி தலைவியாக இருந்து வரும் திமுகவை சேர்ந்த ஷீலா மற்றும் அவரது கணவர் பேரூர் திமுக செயலாளரும், வார்டு கவுன்சிலருமான சத்தியராஜ் உட்பட 9 கவுன்சிலர்கள் மற் றும் 200 க்கும் மேற்பட்ட திமுகவினர் தவெகவில் இணைந்தனர்.

இவர்கள் நேற்று முன்தினம் இரவு கிள் ளியூர் பகுதியில் உள்ள ஒரு மண்டபத் தில் குமரி மேற்கு மாவட்ட செயலாளர் சபின் தலைமையில் உறுதிமொழி எடுத் துக்கொண்டு தங்களை கட்சியில் இணை த்துக்கொண்டனர். பிரம்மாண்டமாக நடைபெற்ற இந்த இணைப்பு விழாவில் கேக் வெட்டி கொண்டாடி மகிழ்ந்தனர். தேர்தலை சந்திக்கும் முன்னே குமரி மாவட்டத்தில் ஒரு பேரூராட்சியை தவெக தன்வசப்படுத்தி உள்ளது குறிப்பி டத்தக்கது. மேலும் வரும்காலத்தில் நடைபெற இருக்கும் உள்ளாட்சி தேர்த லில் குமரி மாவட்டத்தை தவெகவின் கோட்டையாக மாற்றுவோம் என சூழுரை ஏற்றனர்.



தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், சேசம்பட்டி தேசிய நெடுஞ்சாலை அருகில் உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி பல்வேறு வகையானமரக்கன்றுகள் நடும் பணியினை மாவட்ட ஆட்சியர் வே.சரவணன், தொடங்கி வைத்தார்கள்.

# திருச்சி கிழக்கு இடைத்தேர்தலில் காங்கிரஸ் போட்டியிடாது

## சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ்குமார் கிள்ளியூரில் பேட்டி



மார்த்தாண்டம், ஜூன்.9

கிள்ளியூர் சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்று தற்போது தமிழக சுற்றுலாத்துறை அமைச்சராக இருந்து வரும் காங்கிரஸ் கட்சியின் ராஜேஷ்குமார் தனக்கு வாக்களித்த சூழால் ஊராட்சிக்கு உட்பட்ட மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பிரச்சார வாகனத்தில் பயணம் மேற்கொண்டு வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். அப்போது செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது:

குமரி மாவட்டத்தில் கடந்த ஆட்சி காலத்தில்துவங்கப்பட்ட பணிகள்நடைபெற்று வருகிறது. அந்த பணிகள் முழுமையாக சரியாக நடக்கிறதா? என்பது குறித்து 2 நாட்கள் கழித்து நேரடியாக ஆய்வு செய்து அந்த பணிகளை தீவிரப்படுத்த உள்ளோம். மேலும் இன்னும் என்னென்ன திட்டங்களை கொண்டு வரலாம் என்பது குறித்து ஆய்வுகள் செய்து அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து நடைமுறைபடுத்தப்படும்.

சுற்றுலா மாவட்டங்கள் வரிசையில் இருக்கும் குமரி மாவட்டத்தை மேலும் மெருக்கேற்றி முதலாவது இடமாக மாற்றுவோம். மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தலங்கள் மற்றும் வழிபாட்டு தலங்களுக்கு வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கப்படும். சுற்றுலா தலங்களில் குப்பைகளைசரிவர அகற்ற தேவையான நடவடிக்கைகள் எடுத்து இந்த துறையை ஒரு நல்ல துறையாக மாற்ற வேண்டும் என்பதுதான் எனது எண்ணம். ஆகையால் தமிழகம் முழுவதும் இருக்கின்ற சுற்றுலா மையங்களை பார்வையிட்டு அங்கெல்லாம் என்னென்ன தேவை இருக்கிறது என்பதை கண்டறிந்து என்னென்ன புது திட்டங்களை கொண்டு வர வேண்டும் என்பதை அறிந்து வரும் நிதி அறிக்கையின் போது முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்று நல்ல திட்டங்களை அறிவிப்போம்

திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதி ஏற்கனவே தவெக தலைவர் முதல்வர் விஜய் நின்று வெற்றிபெற்ற தொகுதி என்பதால் காங்கிரஸ் அங்கு போட்டியிடாது. தமிழக வெற்றி கழகத்தை சேர்ந்தவர் தான் போட்டியிடுவார். இந்திய கூட்டணி குறித்த முடிவுகளை டெல்லி தலைவர்கள்தான் எடுப்பார்கள்.

திமுக வை குறித்து சொல்லவேண்டுமன்றால் அதிக நாள் ஆகும். அதிக நேரம் ஆகும். திமுகவினர் 1967 முன்னால் மற்றும் பின்னால் என்னென்ன தவறுகள் செய்தார்கள் என்பது மக்களுக்கு தெரியும். தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சிக்கே சாத்தியமே இல்லை என்று சொன்னார்கள். இப்போது கூட்டணி ஆட்சி சாத்தியமாகியதா?. அதனால் அவர்கள் பேச்சை நாங்கள் கணக்கில் எடுத்துக்கொள்வது இல்லை. என தெரிவித்தார்.



நாகர்கோவிலில்

# மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்; அமைச்சர்கள் பங்கேற்பு

நாகர்கோவில், ஜூன்.9

தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணைக்கிணங்க கன்னியாகுமரி மாவட்டம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில்மீனவர்களுக்கு2026ம்ஆண்டிற்கான மீன்பிடித்தடைக்கால நிவாரணம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள வருவாய் கூட்டரங்கில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமை வகித்தார். கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய்வசந்த், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் கே.விஜய கார்த்திகேயன் அகியோர் முன்னிலை வகித்தனர். மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணைஇயக்குநர் கோபிநாத் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் மீனவளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆ.ஸ்ரீநாத், சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ்குமார் அகியோர் மீனவ மக்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரணமாக 27,250 மீனவ குடும்பங்கள் தலா ரூ.8000, நாட்டுப்படகு வெளிப்பொருத்தும் இயந்திரம் ரூ.12.92 இலட்சம் மதிப்பீட்டில் 20 மீனவர்களுக்கும், 40% மானிய விலையில் 6 மீனவர்களுக்கு ரூ.1.17 இலட்சம் மதிப்பீட்டில் மீன்பிடி உபகரணங்கள், மீன்பிடிக்கும் போது மரணமடைந்த மீனவ குடும்பத்திற்கு ரூ.2.00 இலட்சமும், இயற்கையாக மரணமடைந்த மீனவ குடும்பத்திற்கு 27,500 மற்றும் மீனவ குடும்பங்களுக்கு கல்வி நிதியாக ரூ.1,500 வழங்கப்பட்டது. மொத்தமாக 21.96 கோடியில் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினர்.

நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆஸ்டின், கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் ந.தளவாய் சுந்தரம், குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் முனைவர் தாரகை கத்பர்ட், பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.செல்லசுவாமி, நாகர்கோவில் மாநகராட்சி மேயர் பொறுப்பு மேயர் மேரி பிரின்சி லதா அகியோர் வாழ்த்துரை வழங்கினர்கள். மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் விர்ஜில் கிராஸ் நன்றி கூறினார்.

கன்னியாகுமரி அருகே

# கோயில் தகராறில் கொத்தனாருக்கு வெட்டு; பூசாரி கைது

கன்னியாகுமாரி, ஜூன். 9

கன்னியாகுமரி அருகே நாடான்குளம் பகுதியை சேர்ந்தவர் ஜோசப் மகன் தங்கராஜ் (37). கொத்தனார் வேலை பார்க்கிறார். கொட்டாரம் லட்சுமிபுரம் பகுதியை சேர்ந்தவர் ஆதிலிங்கம் (47) டிரைவரான இவர் நாடான்குளத்தில் உள்ள இசக்கியம்மன் கோயில் பூசாரி ஆகவும் உள்ளார்.

இந்த நிலையில் இசக்கியம்மன் கோயில் கொடை விழா நடந்தது. விழாவின் போது கோவில் வளாகத்திற்குள் வாகனங்கள் நிறுத்தக் கூடாது என்று முடிவு செய்து கோவில் சார்பில் அறிவிக்கப்பட்டது. சம்பவ தினம் ஆதிலிங்கத்தின் மகன் ஸ்ரீ ராகவேந்திரன் என்பவர் தனது பைக்கை கோவில் வளாகத்தில் நிறுத்தியதாக தெரிகிறது. இதனை பார்த்த தங்கராஜ் கோயில் வளாகத்தில் பைக் நிறுத்தக்கூடாது என கூறி வண்டியை அகற்றுமாறு கூறினார். இதனை ஸ்ரீ ராகவேந்திரன் தனது தந்தையிடம் கூறியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த ஆதிலிங்கம் நேற்று அரிவாளுடன் சென்று கோயிலில் நின்ற தங்கராஜிடம் தகராறு செய்து அவரை அரிவாளால் வெட்ட முயன்றார்.

தங்கராஜ் சுதாரித்துக் கொண்டு விலகினாலும் அவரது தோள்பட்டையில் வெட்டு விழுந்தது. தொடர்ந்து தங்கராஜ் ஓடவே விடாமல் துரத்தி சென்று மீண்டும் கையில் வெட்டினார். பின்னர் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் சத்தம் போடவே ஆதிலிங்கம் அரிவாளை காண்பித்து கொலை மிரட்டல் விடுத்து சென்றுள்ளார். இது குறித்து கன்னியாகுமரி போலீசில் புகார் அளிக்கப்பட்டது. காயமடைந்த தங்கராஜ் கன்னியாகுமரி அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். போலீசார் வழக்கு பதிவு செய்து ஆதி லிங்கத்தை கைது செய்தனர். இந்த சம்பவம் நாடான்குளத்தில் பரபரப்பு ஏற்படுத்தியது.

கருங்கல் போலீஸ் நிலையம் முன்பு

# பெண்ணுக்காக மோதி கொண்ட கல்லூரி மாணவர்கள்; 6 பேர் கைது

மார்த்தாண்டம், ஜூன். 9

கருங்கல் அருகே உள்ள தொலையாவட்டம் என்ற பகுதியை சேர்ந்த 19 வயது வாலிபர் ஒருவர் நாகர்கோவிலில் உள்ள தனியார் கல்லூரியில் பிஎஸ்சி கம்ப்யூட்டர் சயின்ஸ் 2ம் ஆண்டு படித்து வருகிறார். அவருக்கும் கோணம் பகுதியில் உள்ள கல்லூரியில் பிபிஏ 3ம் ஆண்டு படிக்கு மாணவிக்கும் இன்ஸ்டாகிராம் மூலம் பழக்கம் ஏற்பட்டுள்ளது. இருவரும் கடந்த ஆறு மாதங்களாக இன்ஸ்டாகிராமில் பழகி வந்துள்ளனர். இந்த நிலையில் மாணவி படிக்கும் அதே கல்லூரியில் ஆரல்வாய்மொழி பகுதியை சேர்ந்த 20 வயது மாணவரும் படித்து வருகிறார். ஆரல்வாய்மொழி மாணவரும் அதே மாணவியுடன் இன்ஸ்டாகிராமில் பழகி வந்துள்ளார். இதை அடுத்து ஆரல்வாய்மொழி மாணவருக்கு தான் பேசும் மாணவியுடன் தொலையாவட்டத்தை சேர்ந்த மாணவர் இன்ஸ்டாகிராமில் பேசுவது தெரிய வந்தது. இதனால் கோபம் அடைந்த ஆரல்வாய்மொழி மாணவர் இன்ஸ்டாகிராமில் சாட் மூலம் தொலையாவட்டத்தை சேர்ந்த மாணவரை தொடர்பு கொண்டு, நான் பேசும் பெண்ணிடம் நீ எப்படி பேசலாம் என கேட்டு அவர்களிடைய தகராறு ஏற்பட்டு உள்ளது.

இந்த நிலையில் இரண்டு பேரும் நேரில் பேசி பிரச்சனைக்கு முடிவு கட்டலாம் என கூறி உள்ளனர். அப்போது தொலையாவட்டம் மாணவர் ஆரல்வாய்மொழி மாணவரை கருங்கல் பகுதிக்கு வா பேசலாம் என அழைத்துள்ளார். இதை அடுத்து அரல்வாய்மொழி மாணவர் தனது நண்பர்கள் 6 பேருடன் நேற்று முன்தினம் கருங்கல் போலீஸ் நிலையம் முன்பு சென்றனர். தொடர்ந்து தொலையாவட்டம் மாணவரும் தனது நண்பர்கள் சிலருடன் கருங்கல் காவல் நிலைய பகுதிக்கு சென்றனர்.

காவல் நிலையம் அருகே இரு தரப்பினரும் பேச்சு வார்த்தை நடத்தினர். அந்த நேரம் வாக்குவாதம் முற்றி ஒருவரை ஒருவர் தாக்க தொடங்கினர். அந்த நேரம் மோதலில் சிலர் அங்கு கடந்த கற்களை எடுத்து எறிந்து தாக்கியுள்ளனர். இதனால் காவல் நிலைய பகுதியில் பதட்டம் ஏற்பட்டது. மோதல் நடந்து கொண்டிருந்தபோது இன்ஸ்பெக்டரின் வாகனம் காவல் நிலையத்திற்கு வந்தது. அந்த நேரம் இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் தூக்கி எறிந்த கற்கள் போலீஸ் சவாகன கண்ணாடி மீது பட்டு வாகனம் சேதமடைந்தது. இதையடுத்து இன்ஸ்பெக்டர் மற்றும் போலீசார் இருதரப்பு வாலிபர்களையும் மடக்கி பிடிக்க முயன்றனர். போலீசாரை கண்டதும் வாலிபர்கள் சிதறி ஓட்டினார்கள். எனினும் சுதாரித்துக்கொண்ட போலீசார் தொலையாவட்டத்தைச் சேர்ந்த 4 வாலிபர்களை பிடித்தனர். மேலும் மற்றொரு தரப்பை சேர்ந்த 2 பேரையும் பிடித்தனர். 6 பேரையும் காவல் நிலையத்தில் கொண்டு வந்து விசாரணை நடத்தி வருகின்றனர். கருங்கல் போலீஸ் நிலையம் முன்பு நடந்த இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

தேவதானப்பட்டி பேரூராட்சிக்கு சொந்தமானதாகக் கூறி

# கடந்த சுமார் 40 ஆண்டுகளாக கடைகள் கட்டப்பட்டு வாடகை வசூல்: வியாபாரிகள் குற்றச்சாட்டு



தேனி, ஜூன் 9

தேனி மாவட்டம் தேவதானப்பட்டி பேரூராட்சிக்கு சொந்தமானதாகக் கூறி, கடந்த சுமார் 40 ஆண்டுகளாக கடைகள் கட்டப்பட்டு வாடகை வசூலிக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது அந்த இடம் நீர்நிலைப் பகுதி என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவிப்பதாக வியாபாரிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

நீர்நிலைப்பகுதியில்கடைகள்அமைக்கப்பட்டிருந்தால், பல ஆண்டுகளாக வாடகை வசூல் செய்யப்பட்டதற்கான பொறுப்பு யாருக்கு? பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணத்தின் நிலை என்ன? என்ற கேள்விகளுக்கு இதுவரை தெளிவான பதில் வழங்கப்படவில்லை என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். மேலும், அந்தக் கடைகளை நம்பி வாழ்வாதாரம் நடத்தி வந்த வியாபாரிகளின் கடைகளுக்கான மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, பல ஆண்டுகளாக வசூலிக்கப்பட்டவாடகைத்தொகையை திருப்பி வழங்க வேண்டும், பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும், மேலும் இந்த விவகாரத்தில் முழுமையானவிசாரணை நடத்த வேண்டும் என வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட

# கலெக்டர் தலைமையில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

கிருஷ்ணகிரி, ஜூன் 9

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வாரந்தோறும் திங்கட்கிழமை அன்று மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது.

அதனடிப்படையில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம், வீட்டுமனைப் பட்டா, விலையில்லா தையல் இயந்திரம், சலவைப் பெட்டி, முதியோர் உதவித்தொகை, சாலை வசதி, மின் இணைப்பு மற்றும் மகளிர் உரிமைத் தொகை போன்ற பல்வேறு கோரிக்கைகள் குறித்து 560 மனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மனுக்களில் தகுதியான மனுக்கள் மீது துறை சார்ந்த அலுவலர்கள் உடனடி நடவடிக்கை எடுக்கவும், தகுதியில்லாத மனுக்களுக்கு உரிய விளக்கத்தினை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் .அ.சாதனைக்குறள், துணை ஆட்சியர் பயிற்சி .சாய்சைதன்யா ஜாதவ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது .கிருஷ்ணன், தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் .அபிநயா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் .சிவக்குமார் மற்றும் அனைத்து துறை முதன்மை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

# ராமநாதபுரத்தில் இயற்கை எரிவாயு கசிவு குறித்து திங்க் கேஸ்நிறுவனம் மண்டல தலைவர் அழகு ராஜன் விளக்கம்

## 24×7 அவசர தொடர்பு எண்: +91 73582 53999ஐ அழைக்கலாம்

ராமநாதபுரம், ஜூன் 9

ராமநாதபுரம் திங்க் காஸ் நிறுவனம் மண்டல தலைவர் அழகுராஜன் அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கடந்த 06.06.2026 அன்று ராமநாதபுரம் பாரதி நகரில், சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் நடுவதற்காக வேலும்நிக்கம் நிறுவனத்தினர் ஜேசிபி இயந்திரம் மூலம் குழி தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது எதிர்பாராத விதமாக இயற்கை எரிவாயு குழாய் சேதமடைந்ததால் எரிவாயு கசிவு ஏற்பட்டது. இச்சம்பவம் குறித்து உடனடியாக திங்க் கேஸ் (Think Gas) நிறுவனத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

தகவல் கிடைத்தவுடன் நிறுவனத்தின் அவசரகால பராமரிப்பு குழுவினர் துரிதமாக சம்பவ இடத்திற்கு சென்று, பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு எந்தவித அசம்பாவிதமும் ஏற்படாத வகையில் எரிவாயு கசிவை சரிசெய்தனர்.

தொடர்ந்து, எரிவாயு விநியோக சேவையும் வழக்கம்போல் மீண்டும் செயல்படுத்தப்பட்டது.

இயற்கை எரிவாயு பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் திங்க் கேஸ் நிறுவனம் பல்வேறு ஊடகங்கள் வாயிலாகவும், விழிப்புணர்வு கூட்டங்கள், ஜேசிபி மற்றும் பிற இயந்திர இயக்குநர்கள் சங்கங்களுடனான கலந்துரையாடல்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் மூலமாகவும் தொடர்ந்து விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டுமெனில், சாலை, நிலம் அல்லது பொதுப் பகுதிகளில் எவ்வித தோண்டும் பணிகள், கட்டுமானப் பணிகள் அல்லது ஜேசிபி மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளைத் தொடங்குவதற்கு முன்பாக பொதுமக்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் இயந்திர இயக்குநர்கள் திங்க் கேஸ் நிறுவனத்தை தொடர்புகொண்டு தேவையான தகவல்களைப் பெற்று பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும், இயற்கை எரிவாயு குழாய்கள் தொடர்பான தகவல்கள், சந்தேகங்கள் அல்லது அவசர உதவிகளுக்கு எங்களின் கட்டணமில்லா உதவி எண் (TollFree Number): 1800 202 2999ஐ தொடர்புகொள்ளலாம்.

அவசரகாலங்களில் எங்களின் 24×7 அவசர தொடர்பு எண்: +91 73582 53999 ஐ உடனடியாக அழைத்து தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். பாதுகாப்பு அனைவரின் பொறுப்பு – விழிப்புணர்வுடன் செயல்படுவோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




கோவை மாவட்டம் அரசூர் பகுதியில் முதல்வரின் பிறந்தநாள் விழா கோவை புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் பாபு தலைமையில் அமைச்சர் சம்பத்குமார் முன்னிலையில் சூலூர் கிழக்கு ஒன்றிய செயளாலர் விமல் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளி ஒருவருக்கு மூன்று சக்கர மிதிவண்டி,பெண்களுக்கு சேலை,கிரிக்கெட் வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்,ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டது.



தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் அதியமான் கோட்டையில் உள்ள ஸ்ரீ காலபைரவர் திருக்கோவிலில் வைகாசி மாத தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு பைரவருக்கு சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் சுவாமி பக்தர்களுக்கு அருள் பாவித்தார். தருமபுரி, சேலம் ,கிருஷ்ணகிரி மற்றும் கர்நாடக மாநிலத்திலிருந்து ஏராளமான பக்தர்கள் வந்து நெய் தீபம், ஷாம் பூசணிக்காய் தீபம், எலுமிச்சம் பழம் தீபம், தேங்காய் தீபம் ஆகியவை ஏற்றி நேர்த்திக்கடன் செலுத்தினார்கள். பின்னர் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். திருக்கோயில் சார்பில் பக்தர்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டது.



# நாகர்கோவிலில் மீனவர் நலத்துறை அலுவலர்களுடன் 2 அமைச்சர்கள் ஆய்வு

நாகர்கோவில், ஜூன் 9

கன்னியாகுமரி மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் மீனவர்களின் கோரிக்கைகள் மற்றும் கடலோர மீனவ கிராமங்களில் மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்தது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆ.ஸ்ரீநாத் அவர்கள் ஆகியோர் கலந்தாய்வு மேற்கொண்டார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 42 மீனவ கிராமங்கள் உள்ளன. இங்கு சுமார் 1,43,388 மீனவ மக்கள் வசித்து வருகின்றனர். சின்னமுட்டம், குளச்சல், தேங்காப்பட்டணம், முட்டம் (தனியார்) என மொத்தம் 4 மீன்பிடித்துறைமுகங்களும், 9 மீன் இறங்கு தளங்களும் உள்ளன. மேலும் 119 மீனவள கூட்டுறவு சங்கங்களும், 40 மீன்வள கூட்டுறவு நியாய விலைக்கடைகளும் செயல்பட்டு வருகின்றன. தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது குறித்தும், ஆழ்கடலில் மீன்பிடிப்பவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது குறித்தும், புதிய உட்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்துவது குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்டாதவிசைப்படகுகளை பதிவு செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் கடலில் காணாமல் போகும் மீனவர்கள் மற்றும் ஆழ்கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் உடனடியாக அவர்கள் கரைக்கு திரும்புவதற்கு ஏதுவாக கடல் ஆம்புலன்ஸ் திட்டத்தினை விரைவாக செயல்படுத்த வேண்டும். மேலும் கடல் சீற்றங்களினால் பாதிக்கப்படும் கடலோர மீனவ கிராமங்களை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மற்றும் திட்ட மதிப்பீடு தயாரிக்க துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

கடல் சீற்றங்களால் பாதிக்கப்படும் மீனவர்களுக்கு உடனடியாக உதவுவதற்கு பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து தொகையினை விடுவித்து வழங்க வேண்டும்.

தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட மண்டைக்குடி மீனவர்கள் தாயகம் திரும்புவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் அனைத்தும் கடைகோடி மீனவக்குடும்பத்திற்கு சென்றடைவதை துறை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். மீனவர்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் மரு.விஜய கார்திகேயன், விஜய் வசந்த், எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் (பொ) மேரி பிரின்சி லதா, கன்னியாகுமரி மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் கோபிநாத் உள்ளிட்ட துறை அலுவலர்கள், பயனாளிகள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

### கிருஷ்ணகிரி அருகே

# ஸ்ரீ காலப் பைரவர் திருக்கோவிலில் தேய்பிறை அஸ்டமி சிறப்பு பூஜை



கிருஷ்ணகிரி, ஜூன் 9

கிருஷ்ணகிரி அருகே உள்ள பெரிய ஏரிக்கரையில் சுமார் 8040 ஆண்டுகள் பிரச்சித்தி பெற்ற ஸ்ரீ காலபைரவா திருக்கோவில் அமைந்துள்ளது.

இத்த திருக்கோவிலில் ஒவ்வொரு தேய்பிறை அஸ்டமியையொட்டி வெபூசணிக்காயில் விளக்கு ஏற்றும் நிகழ்வு வெகு விமர்ச்சியாக நடைப்பெறுவது வழக்கம், அந்த வகையில் இன்று ஸ்ரீ காலப்பைரவா திருக்கோவில் இன்று தேய்பிறை அஸ்டமியையொட்டி சிறப்பு பூஜை வழிப்பாடுகள் நடத்தப்பட்டது.

இதில் கிருஷ்ணகிரி, கும்மனூர், தாசிரிப்பள்ளி, சோமார்பேட்டை, வெண்ணம்பள்ளி காத்தாடி குப்பம், சூரன் குட்டை, ஆலப்பட்டி என மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கலத்துக் கொண்ட பக்தர்கள் தங்களது வேண்டுதலைநிறைவேறிடும்வகையில்ஸ்ரீகாலப்பைரவர் சுவாமிக்கு வெண் பூசணிக்காயில் நெய் தீபம் ஏற்றி வழிப்படனர்.

மேலும் இந்த விழாவிற்கு கிருஷ்ணகிரி தவெக சட்ட மன்ற உறுப்பினர் முகுந்த் பாண்டியன் கலந்துக் கொண்டு ஸ்ரீ காலப் பைரவர் சுவாமியை தரிசனம் பெய்து வழிப்பட்டார்,

இதன் முன்னதாக ஸ்ரீ காலபைரவர் திருக்கோவிலுக்கு வருகை தந்த தவெக சட்ட மன்ற உறுப்பினர் மு முகுந்த் பாண்டியனுக்கு ஸ்ரீ காலப் பைரவர் திருக்கோவின் அறக்கட்டளையின் தலைவர் வேலாயுதம், கெளரவ தலைவரும் காங்கிரஸ் கட்சியின் கிழக்கு மாவட்டத் துணைத்தலைவருமானபி.சி.சேகர், செயலாளர்கணேசன் உள்ளிட்ட பலர் சிறப்பான வரவேற்பு அளித்தனர், மேலும்நேப்பிறைஅஸ்டமியைமுன்னிட்டுநடைப்பெற்ற சிறப்பு பூஜையில் தங்க கவசத்தில் காட்சியளித்த ஸ்ரீ காலப்பைரவர் சுமியை மாவட்டத்தின் பல்வேறு இடங்களில்இருந்து ஏராளமானமக்கள்கலந்துக்கொண்டு வழிப்பட்டனர்.



### தஞ்சாவூர் மாவட்டத்தில்

# 13 இடங்களில் நிரந்தர நெல் கொள் முதல் நிலையம் கட்ட இடம் தயார்: அமைச்சர் தகவல்

தஞ்சாவூர் ஜூன் 9

தஞ்சாவூர் மாவட்டத்தில் 13 நிரந்தர நெல் கொள்முதல் நிலைய கட்டிடங்கள் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு, தயார் நிலையில் உள்ளன என வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் வினோத் தெரிவித்தார்

கும்பகோணம் அருகே பட்டீஸ் வரம் திறந்த வெளி நெல் சேமிப்பு கிடங்கு , சோழன் மாளிகை நேரடி நெல் கொள்முதல் நிலையம், கோட்டையூர் ஒழுங்கு முறை விற்பனை கூடம் ஆகியவற்றை ஆய்வு செய்து அமைச்சர் வினோத் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பட்டீஸ்வரத்தில் 30 ஆயிரம் டன் மேல் கொள்ளளவு கொண்ட திறந்த வெளி சேமிப்பு கிடங்கில் தற்போது 25 ஆயிரம் டன் நெல் உள்ளதால், மேலும் 5, ஆயிரம்டன் மட்டுமே சேமிக்க முடியும். எனவே நடப்பு முற்பட்ட குறுவை பருவத்தில் கொள் முதல் செய்யப்பட உள்ள 3 லட்சம் டன் நெல்லை பாதுகாப்பாக சேமித்து வைக்க வேண்டும். இம்மையத்தில் 250 நெல் அட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது. திடீர் மழை ஏற்பட்டால் அனைத்து அட்டிகளை யும் உடனடியாக தார்ப்பாய் கொண் டு மூடப் போதிய சுமை பணியாளர் களை எப்போதும் தயார் நிலையில் வைத்திருக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கிருஷ்ணாபுரத்தில் மாநகராட்சி சொந்தமான 50 ஏக்கர் நிலத்தை திறந்தவெளி நெல் சேமிப்பு மைய மாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கவும்,தண்டந்தோட்டம்கிராமத்தில் இந்து சமய அறநிலையத்து றைக்கு சொந்தமான 10 ஏக்கர் நிலத்தை குத்தகை அடிப்படையில் பெற்று நிரந்தர நெல் சேமிப்பு கிடங்கு அமைக்கவும் ,தேவையான நடவடிக்கைகளை விரைவுப்படுத்த வும் அலுவலர்களுக்கு அறிவுறுத்த ப்பட்டுள்ளது

2024 2025 ஆம் ஆண்டில் தமிழ கத்தில் 50 நிரந்தர நெல் கொள் முதல் நிலைய கட்டிடங்கள் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்ட நிலையில், தஞ்சாவூர் மாவட்டத்தில் தலா ரூபாய் 30 லட்சத்தில் 13 கொள் முதல் நிலைய கட்டிடங்கள் கட்ட இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, தயாராக உள்ளன .கொட்டையூர் ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகத்தில் ரூபாய் 2.20 கோடியில் கட்டப்பட்டு வரும் 1,000 டன் கொள் ளளவு கொண்ட நெல் சேமிப்பு கிடந்து கட்டுமான பணிகளை விரைவாக முடித்து பயன்பாட்டுக்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது, என்றார்.

ஆய்வின்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் செல்வம் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்



# தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் தலைமையில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

தஞ்சாவூர் ஜூன் 9

தஞ்சாவூர் மாவட்ட பொதுமக்கள் குறை தீர்க்கவும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட கலெக்டர் ரேவதி தலைமையில் நடைபெற்றது

இக்கூட்டத்தில் இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் உதவித் தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 493 மனுக்களை பொது மக்கள் மாவட்ட கலெக்டரிடம் வழங்கினார்கள்

இம்மனுக்களை பெற்றுக் கொண்டு, மனுக்கள் மீது நடவடிக் கையை உடனடியாக எடுக்கும்படி மாவட்ட கலெக்டர் ரேவதி உத்தரவிட்டார்

அதனைத் தொடர்ந்து பொது மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தஞ்சாவூர் தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி) அலுவலகம் சார்பில் 9 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு திருமணம் , கல்வி, பணியிடத்தில் விபத்து, மரணம் மற்றும் ஓய்வூதியம் என ரூபாய் 14,62,400 மதிப்பிலான நலத்திட்டங்களுக்கான ஆணையும் மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் மோட்டார் பொருத்திய இலவச தையல் இயந்திரம் 3 பயனாளிகளுக்கும் மாவட்ட கலெக்டர் வழங்கினார்

அதனைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் மாபெரும் நீர் நிலைகளை தூய்மை ப்படுத்தும் சவால் 2026 உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு தஞ்சாவூர் மாநகராட்சி , வல்லம் பேரூராட்சி, சேதுபாவாச்சத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலகம், மாரியம்மன் கோவில் ஊராட்சி, கவின்மிகு தஞ்சை இயக்கம், விதை சுற்றுச்சூழல் அறக்கட்டளை, திரு தொண்டர் அறக்கட்டளை, ஜோதிமணி இறைப்பணி, திருக்கூட்டம், திருவையாறு பசுமை குழுமம் மற்றும் எஸ் ஆர் ராஜதீபன் சக்கரவர்த்தி ,அரசு துறைகள் மற்றும் தன்னார்வ குழுக்களுக்கும் பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட கலெக்டர் ரேவதி வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்டவருவாய்அலுவலர்தியாகராஜன், உதவி ஆட்சியர் (பயிற்சி) சுரேஷ் கார்த்திக் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினர் நல ரவிச்சந்திரன், சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் சௌமியா ,உதவி ஆணையர் (கலால்) ரேணுகா தேவிமற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்

# மலை காய்கறி விதைப்பு பணி தீவிரம்



ஊட்டி, ஜூன் 9

நீலகிரி மாவட்டத்தில் மலை தோட்ட காய்கறி பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் தென்மேற்கு பருவமழை ஒரு நாட்களில் தீவிரமடையும் என அறிவிக்கப் பட்டுள்ளதால் தற்போது விவசாயிகள் தங்களது விளை நிலங்களில் சாகுபடி பணிகளில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். முதல் கட்டமாக நிலத்தை சீர் செய்து டிராக்டர் மூலம் உழவு செய்யும் பணியை துவக்கி அதன் பின்னர் தோட்டத்தில் விதைப்பு பணிகளும் தீவிரமாக நடந்து வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் கார் போகம், கடை போகம்,நீர் போகம் என மூன்று பருவ காலங்களில் மழை காய்கறிகள் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு போதிய மழை இல்லாததால் விவசாய துவக்கப்படாமல் இருந்த நிலையில், தற்போது பரவலான மழை பெய்து வருவதால் அடுத்து சில நாட்களுக்குள் தென்மேற்கு பருவமழை தீவிரமடையும் என நம்பிக்கை ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் தீவிரமாக மலை காய்கறிகளை நடவு செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



### தஞ்சாவூரில்

# வெண்ணைத்தாழி அலங்காரத்தில் 18 பெருமாள் சுவாமிகள் வீதியுலா

தஞ்சாவூர் ஜூன் 9

தஞ்சாவூரில் 18 கோயில்களில் இருந்து வெண்ணெய் தாழி அலங்காரத்தில் பெருமாள் சுவாமிகள் மீது உள்ள நடைபெற்றது

தஞ்சாவூரில் கருட சேவையை முன்னிட்டு 27 கோவில்களிலிருந்து பெருமாள் சுவாமிகள் கருட வாக னத்தில் எழுந்தருளி ஒரே இடத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர்

இந்த நிலையில், தஞ்சாவூர் வெண்ணாற்றங்கரை நரசிம்ம பெருமாள் கோவிலில் இருந்து உற்சவ பெருமாள் சுவாமிகள் வெண்ணெய் தாழி அலங்காரத் தில் எழுந்தருளி தஞ்சாவூர் கீழ ராஜவீதிக்கு வந்தார். இதை போல் தஞ்சாவூர் மாநகரில் உள்ள நீலமேக பெருமாள், மணி குண்றா பெருமாள், கல்யாண வெங்கடேச பெருமாள், யாதவ கண்ணன், ரங்கநாத பெருமாள் , கோதண்ட ராமர் ,பிரசன்ன வெங்கடேச பெருமாள், வரதராஜ பெருமாள் உள்ளிட்ட மொத்தம் 18 கோவில் களிலிருந்து வெண்ணைத்தாழி அலங்காரத்தில் பெருமாள் சுவாமி கள் புறப்பட்டு, தஞ்சாவூரில் உள்ள கீழ வீதி, தெற்கு வீதி ,மேல வீதி, வடக்கு வீதி ஆகியவற்றில் வீதி உலா சென்ற பக்தர்களுக்கு அருள் பாலித்தனர் . வெண்ணெய்த்தாழி உற்சவத்தில் பங்கேற்ற பக்தர்கள் பஜனை பாடல்களை பாடியவாறு சென்றனர்

# தருமபுரி அருகே கஞ்சா விற்பனை நாலு பேர் கைது; 3 கிலோ கஞ்சா பறிமுதல்

தருமபுரி ஜூன் 09

தருமபுரி நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டதாக நான்கு பேரை காவல்துறையினர் கைது செய்து அவர்களிடமிருந்து 3 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

தருமபுரி பகுதியில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் காவல்துறையினர் பல்வேறு இடங்களில் தீவிர கண்காணிப்பு மற்றும் சோதனைகள் மேற்கொண்டனர்.

அப்போது ஹரிஹரன், சிவசக்தி, கார்த்திக் மற்றும் அபுபார்க்கர் ஆகியோர் பணியில் ஈடுபட்டது தெரியவந்தது. இதை அடுத்து அவர்களை காவல்துறையினர் கைது செய்தனர். மேலும் அவர்களிடம் இருந்து சுமார் 3 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் தொடர்புடைய சக்தி குமரன் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறப்படுகிறது. கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து கஞ்சா எவ்வாறு பெறப்பட்டது வேறு யாருக்கெல்லாம் விற்பனை செய்யப்பட்டது என்பது குறித்து தருமபுரி நகர காவல் துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். போதைப்பொருள் விற்பனையை முற்றிலும் ஒலிக்கும் நோக்கில் மாவட்டம் முழுவதும் தொடர்ந்து கண்காணிப்பு மற்றும் சிறப்பு சோதனைகள் மேற்கொள்ளப்படும் என காவல்துறையினர் தெரிவித்தனர்.

### புதூரில்

# பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் கண்டன ஆர்ப்பாட்டம்

விளாத்திகுளம் ஜூன் 09.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள புதூர் பகுதிகளை சேர்ந்த ஏராளமான விவசாயிகள்,புதூர் பேருந்து நிலையம் முன்பு தமிழக அரசைகண்டித்து தமிழக அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது விவசாயிகள் கூறுகையில், தற்போதைய தமிழக அரசு அறிவித்த பயிர்கடன் தள்ளுபடி முழுமையாக விவசாயிகளுக்கு பொருந்தாதவாக்குறுதியாக தான் இருக்கிறது, கடந்த அரசாவது சிறு, குறுவிவசாயி, பெரு விவசாயி என பிரித்தார்கள், ஆனால் தற்போது வந்துள்ள அரசு, சிறு,குறு விவசாயிகளையும்இரண்டாகபிரித்துள்ளனர், இது எந்த விதத்திலும் விவசாயிகளுக்கு லாபம் என்பதை இல்லாத சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது.



எந்த ஒரு விவசாயியும் ஒரு லட்ச ரூபாய்க்கு கீழாக பயிர் கடன் வாங்கவில்லை, ஆனால் தற்போதைய அரசு ஒரு லட்ச ரூபாய்க்கு மேலே இருந்தால் 5000 மட்டும் தள்ளுபடி என்கின்றனர், இந்தத் தள்ளுபடி எந்த விதத்திலும் ஏற்புடையதல்ல. 2025-2026 நிதியாண்டில் விவசாயிகள் பல்வேறு கட்ட போராட்டங்கள் நடத்திய பின், மாவட்ட ஆட்சியர் பல்வேறு பகுதிகளில் ஆய்வு செய்து 2025 2026 நிதியாண்டு போதுமான மழை இல்லாத காரணத்தினால் வறட்சியான சூழ்நிலையை உள்ளது என்பதை ஆய்வு அறிக்கையை தமிழக அரசுக்கு மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

ஆனால் மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்த அறிக்கை தற்போது எந்த நிலையில் உள்ளது என்பதும் தெரியவில்லை, தற்போது வந்துள்ள புதிய மாவட்ட ஆட்சியர் இனிமேல் நான் வந்து ஆய்வு செய்கிறேன் என்று கூறியுள்ளார். அதேபோல் உளுந்து, பாசி,மல்லி,மிளகாய்,மக்காசோளம் உள்ளிட்ட பயிர்களுக்கு உரிய விலை நிர்ணயம் இல்லாததால் விவசாயிகள் வியாபாரியிடம் அடிமட்டத்திற்கு விவசாயப் பொருட்களை கொடுக்கும் நிலை வருடம் வருடம் ஏற்பட்டு வருகிறது. மிளகாய்க்கு ஒரு குவிண்டலுக்கு 20,000 முதல் 25,000 வரையும், மக்காச்சோளத்திற்கு 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை விலை நிர்ணயம் அரசு நிர்ணயிக்க வேண்டும் எனவும். அதேபோல் நடப்பாண்டில் உள்ள விவசாய கடன் மற்றும் விவசாயத்திற்கான காப்பீடு,இழப்பீடுதொகையைஅனைத்துவிவசாயிகளுக்கும் முழுமையாக வழங்க வேண்டும். காட்டுப்பன்றிகளை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், காட்டுப்பன்றிகளால் விவசாயிகள் மற்றும் விவசாயிகள் பயிர்கள் வருடம் வருடம் பாதிப்படைந்து வருகிறோம். எனவே விவசாயிகளின் அனைத்து கோரிக்கைகளையும் 15 நாட்களுக்குள் சரி செய்ய வில்லை என்றால்,மாபெரும் சாலை மறியல் போராட்டத்தை நடத்துவோம் என விவசாயிகள் தமிழக அரசுக்கு எச்சரிக்கை எடுத்துள்ளனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.